உ
சிவமயம்



யாழ்ப்பாணம், தென்மராட்சி, மீசாலையைச்
சேர்ந்த
# அமரர் திருமதி கதிரவேலு இராசம்மா
அவர்களின் சிவபதப்பேறு குறித்த
# நினைவுக் கலசம்
## 30.10.2005

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


- தோத்திரப் பாடல்கள்
- க.இராசம்மாவின் வாழ்வியற் பதிவுகள்
- உறவும் உடன் பிறப்பும்
- சிவபுராணம்
- கந்தசஷ்டி கவசம்
- சகலகலாவல்லி மாலை
- திருவெம்பாவை
- திருப்பொற் சுண்ணம்
- ஆத்திசூடி
- கொன்றை வேந்தன்
- எண் சோதிடம்
- வாய்பாடு
- கண்ணீர் அஞ்சலி
- நன்றிநவிலல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் மேலாம்
தெய்வத்துள் வைக்கப்படும்

# திருமதி. க. இராசம்மா அவர்கள்

தோற்றம்
10 ❊ 02 ❊ 1927



மறைவு
30 ❊ 09 ❊ 2005

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு கார்த்திகைசேர் புரட்டாதியில் அபரம்
பூண்ட திதிதிர யோதசியில் - மாண்புடைய
ஈசனது தாள்சேர்ந்தார் இராசம்மா பேராள்
காசினியில் வாழ்வு விட்டே தான்

## நிறைமொழி

நீர்க்குமிழ் போலத் தோன்றி நிலையின்றி நீங்கும் வாழ்வு
பார்தனிற் பிறப்போ ரெல்லாம் பழவினைப் பயன்நுகர்ந்தே
தீர்ந்ததும் சிறிதும் தங்கார் தேகத்தை விட்டுச் செல்வார்
சேர்பிற வீப்பிணி நீங்கில் சிவனடிதன்னிற் சேர்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## தோத்திரப் பாடல்கள்

## தேவாரம்

### திருச்சிற்றம்பலம்

தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமோ றேதோ
மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டா
சிந்தையீர உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்க லாமே.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
லாவதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே

கூற்றாயினவா றுவிலக் ககலீர்
கொடுமை பலசெய்தன நானறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தேற்றா தென்வயிற் றினகம்படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒருரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும் நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினை சுருக்கும்
புழுத்தலைப் புலையனே தனக்குச்
செம்மையெ ஆயசிவாதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியெ.

பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்துந் பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவ பெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் சித்திக்குந் தேனே
அளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
அம்பலம் ஆடரங் காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

கற்றவர் விழுங்கும கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே

## திருப்பலாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடற் ஈந்தபிரான்
மாலுக்கு சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொணடுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருளை வில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டுமின்று மென்று முள்ளபொரு ளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புகழ்

நாடித் தேடித் தொழுவார் பால்
ஞானத் தாகத் திரிவேனோ
மாடற் கூடற் பதி ஞான
வாழ்வைச் சேரத் தருள்வாயே
பாடற் காதல் புரிவோனே
பாலைத் தேனோ தருவோனே
ஆடற் தோகைக் கினியோனே
ஆனைக் காவில் பெருமானே

பிறவியலை ஆற்றினில் புகுதாதே
பரகிருதி மார்க்கழற் றலையாதே
உறுதி குருவாகிய பொருளோனே
உனது பதகாட்சியைத் தருவாயே
அறுசமய சாஸ்திர பொருளோனே
அறிவுள் அறிவார் குணற் கடலோனே
குறு முனிவர் ஏத்தும் முத்தமிடோனே
குமர குரு கார்த்திகைப் பெருமாளே

அபகார நிந்தை பட்டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனை நான் நினைந்தரட் பெறுவோனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இபமாமுகன் தனக்கிளையோனே
இமவான் மடந்தை உத்தமிபாலா
செபமாலை தந்த சற்குரு நாதா
திருவாவி நன்குடிப் பெருமானே

ஏறுமயிலேறி விளையாடு முகம்மொன்றே
ஈசனொடு ஞானமொழி பேசு முகமொன்றே
கூறு மடியார்கள் வினை தீர்க்கு முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம் புணவந்த முகமொன்றே
ஆறு முகமானபொருள் நீயருள வேண்டும்
ஆதி அருணாசலம மர்ந்த பெருமானே

## புராணம்

உலகெலா முணர்ந்தோதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
போதியா தேகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாநிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செயக் குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி கதிரவேலு இராசம்மா அவர்களின் வாழ்வியற் பதிவுகள்

முத்தென விளங்கும் ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தில் தென்மராட்சிப் பகுதியில் முக்கனிகள் மலிந்து சோலையாகக் காட்சி தரும் கிராமம் மீசாலை. 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' 'திருக்கோயில் இல்லாத தருவிலூரில்' என்பன நம் முன்னோர் கூறிய மறை வாக்கியங்கள். கருத்துப் பொதிந்தவை. 'நீறில்லா நெற்றிபாழ்' என்ற அடியொற்றி நீற்றுப்பூச்சு மேனியராய் கந்தபுராணம் கலாச்சாரத்தை அடியொற்றி வாழ்ந்தவர். வெள்ளைமாவடிப்பிள்ளையாரையும், கரும்புமாவடிக் கந்தனையும் சோலை அம்மனையும், காணியையும் அருகாமையில் அமைந்த மீசாலைப் பகுதியில் சிதம்பரப்பிள்ளை - சின்னமாவின் மகளாகவும், அல்லாரையைச் சேர்ந்த நாகமுத்து - வள்ளிப்பிள்ளையின் மருமகளாகவும் வாழ்ந்தவர் அன்னார் கதிரவேலு இராசம்மா அவர்கள். இவர் 10.02.1927ல் பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை மீசாலை விக்கினேஸ்வரா ஆரம்பப் பாடசாலையில் கற்று வந்தார். கல்வி கற்கும் காலத்திலே இவர் ஆயகலைகள் அறுபத்து நான்கு என்று கூறப்படும் நடனம், இசை, பேச்சு போன்ற கலைகளைக் கற்கின்ற ஆர்வம் உள்ளவராக இருந்தார். பல இசை, நடன போட்டிகளுக்கு பாடசாலை மாணவர் மட்டத்தில் அக்காலத்தில் கொழும்புக்கு ஏனைய பாடசாலைகளுடன் போட்டிகளிலும் கலந்து சிறப்பித்து பெருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்கு உண்டு. இந்த பசுமையான நினைவுகளை இவருடன் அன்று படித்த சகோதர, சகோதரிகள் இன்றும் நாம் கூறக் கேட்டுள்ளோம்.

அன்னாரின் வாழ்வின் பருவங்கள் பல கடந்தன. ஒவ்வொரு பருவத்திலும் ஊர்போற்ற அப்பருவத்திற்குரிய வாழ்வை வாழ்ந்த இராசம்மா மணப்பருவம் எய்த அல்லாரையைச் சேர்ந்த நாகமுத்து - கதிரவேலு அவர்களை மணந்து வாழ்வின் வசந்தங்களைக் கண்டார். மழலைச் சொல் கேட்கும் பாக்கியம் கிடைத்தது. முதல் முத்தாக லலிதாவை அடுத்தது வரும் இரத்தினங்களாக முறையே சிறிதரன் (அமரர்) கிருபாகரன் (கனடா), குணசீலன் (பிரான்ஸ்) ஆகியோரைப் பெற்று வாழ்வில் நிறைவு கண்டார் அன்னார். விதி வசத்தால் சுகயீனமுற்று பார்வை குன்றி, பேச்சு இழந்து கால், கை பலவீனமுற்ற நிலையில் இன்றுவரை பாசமிக்க அன்புக் கணவர், மக்கள், மருமக்கள் பராமரித்து வந்தார்கள். உலகமே ஒரு நாடாக மேடை. அதிலே நாம் பிறந்து பல நாடகங்களை ஆடுகிறோம். ஆடி முடிந்ததும் அந்த வேடங்களை களைக்கின்றோம். நாம் வேறு ஒருவர் ஆகின்றோம். இது இயற்கையின் நியதி இதை உண்மையில் குடும்பமாக நடித்து காட்டி உண்மையின் தத்துவத்தைக் காட்டியவர் தான் அன்னார் இராசம்மா அவர்கள்.

அன்னாரின் சகோதரர்களாக அமரர் கோவிந்தபிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) கந்தையா, ஆச்சிப்பிள்ளை (கனடா- ஆசிரியை), சுப்பிரமணியம் (பிரான்ஸ்) மருமக்ககளாகிய சுந்தரலிங்கம், குணவதனி, கலாரஞ்சி ஆகியோரையும், பேரப்பிள்ளைகளாக சுதர்ஷன், தனுஷா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுலோஜன், சிவராஜினி, சுகிர்தன், சுகந்தன், இந்துஜா, சஞ்ஜீவன், நித்திலா, நித்திகன், கர்ணன் ஆகியோரையும் தன் வாழ்வின் இனிய உறவுகளைப் பெற்றார்.

இவ்வாறு வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத்தின் திருவடி நிலைச் சென்றடைந்த அன்னாரின் மறைவினால் மனம் கலங்கி நிற்கும் கணவன் பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள், உறவினர்கள், சுற்றத்தார் மனத்தகத்தில் நீங்காதா நினைவாக என்றென்றும் அவர் வாழ்ந்து கொண்டிருப்பார். அவரின் விண்ணக வாழ்வு நலமாக பிரார்த்திப்போமாக.

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !*

*குடும்பத்தினர்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவும் உடன் பிறப்பும்

பிறப்பால் தொடரும் உறவுகளல்லாமல்
பிணைப்பால் தொடரும் உறவுகளே
உன்னதமானவை.
முதலில் பெற்ற தாய் உறவு.
அதன்பின் தாய் காட்ட தந்தை உறவு
அதன்பின் சகோதர உறவுகள்
அதன்பின் கணவன் உறவு
அதன் பின் பிள்ளைகள் உறவு
அதன்பின் பேரமக்கள் உறவு
இப்படி தொடந்து பிறப்புக்களும்
ஆனால் மனதில் வாழ்வில் சாவு
ஒன்று தான் நிஜம்
வாழ்க்கையில் பயணிகள் சென்று
சேரவேண்டிய இறுதித்
தரிப்பிடம் சாவுதான்
பேரறிஞர்களும் ஈற்றில் தோற்றுப்
போவது இந்தச் சாவிடம் தான்
சா மனித ஆற்றலின் தோல்வி.
விஞ்ஞானிகளால் கூட
விலக்கப்பட முடியாத ஒன்று
சாவுதான் சா எல்லேருக்குமானது
அதி சக்தி பெற்றது.
ஆண்டியும் அரசனும் கணிக்கப்படும்
இடம் சாவுதான், சா வலியது
சா கொடியது,
பறி கொடுத்ததை மீளத் தராது
உயிரின் வதைக் கருவி சா
நாம் சாவிற்காகக் காத்திருப்பபோம்

*ஓம் சாந்தி*

**அன்புச் சகோதரி**

**கு. ஆச்சிப்பிள்ளை (கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமமாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருள்மகிழுங் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயவுரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் –
விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயாவென ஓங்கி ஆழ்ந்த கன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான நாம் விமலா
பொய்யா இனவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின் தொழிம்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்போலச்
சிறந்தடியார்சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த வன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராவமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதாருள்ளத் தொளிக்கு மொளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
உற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற்பிறவிஅறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகா



கந்தர் சஷ்டி கவசம்

சந்தி மேய கந்தவேள்

காப்பு

அமரர் இடர் தீர அமரர் புரிந்த
குமரன்அடி நெஞ்சே குறி.

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து) ஓங்கும்
நிட்டையும் கைகூடும் நிமலர் அருள்
கந்தர் சஷ்டி கவசந்தனை

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கஎன்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரவண பவச ரிரிரி ரிரிரி
விணப சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகொடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரெண்டு இலங்க
விரைந்து எனைக்காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறு இடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈர்அறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ டணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர்ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரம்மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலால வேசமும்
லீலா லீலா லீலாவிநோதன் என்று
உன் திருவடியை உறுதிஎன்று எண்ணும்
என்தலை வைத்துஉன் இணையடி காக்க
என்உயிர்க்கும் உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேர்இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல தன்னில் வச்சிரவேல் காக்க
அரைஇருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபடப்
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாட் டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழுக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராக்கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியொடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஓட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒரு வழிப்போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாளெ எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் மூட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடல் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கி
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்துகுத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணல் எரி
தணல் எரி தணல் எரி தணலதுவாக
வீடுவிடு வேலை வெருண்டு அது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடிந்துயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்த அரணை பருவரை யாப்பும்
எல்லாப்பிணியும் என்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக் கருள்வாய்
ஈர்ஏழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாக
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவணபவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே
பரிபுர பவனே! பவமொழி பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா! கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதில்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா!
சமராபுரி வாழ் சண்முகத் தரசே!
காரர் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் ரஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்தி பெற் றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத் துவசன்!
வாழ்க வாழ்கவென் வறுமைக ணீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததுட னாளும்
ஆசார த்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தனை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெலல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத தடியை
வழியாற் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றனி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனாதி பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரி காப்பு

காப்பெடுக்க வந்தேன்
கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய்
காளி மகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய
காப்பெடுத்தே வாழ்த்திடுவேன்
எண்ணும் கருமம்
இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் விளையாவும்
பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக
உயிரினுக் குயிராக
என்றும் இந்தே
எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன்
மலையும் கடந்து வந்தேன்
காளி மகா தேவியரே
காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே
சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே
அம்மாகாளி தாயே
கொடிய மகிஷா சுரனைக்
கூறு போட்டவளே
அசுர குணம் யாவும்
அழிக்கும் சுடர்க் கொடியே
சிவனே நினைத்தல்லோ
சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ
பதிவிரதம் நீயிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரனை நினைத்தல்லோ
அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ
சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே
அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே
விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே
அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை
வழிவழியாய்க் காட்டுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு
நெறிமுறையை காட்டிடுவாய்
காப்பைப் புனைந்து விடு
காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விட
நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு
வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே
காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே
காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே
நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்க வென்றே
விழைகாப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே
அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்களுக்கு
பெருங்காப்பு அருளுமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமணியே மாமணியே
புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை
நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குத்
கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத்
திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு
வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே
பராசக்தி தாயவளே!
ஏட்டடைத் தேவியரே
எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடக்க வந்தேனம்மா
கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் பெற்றிலைகள்
பல்வகைத் திரவியங்ள்
நானுனக்குத் தாறேனம்மா
நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே
காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே
வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம்
எல்லாம் எமதருளே
காசினியில் வேற்றுமையை
கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம்
ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால்
கல்மனது இளகி விடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் பெருகி வரும்
நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோர்க்கு
தொட்ட தெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு
நினைத்த தெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு
நல்ல தெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்க ளெல்லாம்
நலமுடனே இணைந்து வரும்
சந்தனச் சாந்தவளே
சங்கரியே சாந்திரினியே
குங்குமப் பூச்சவளே
குலககொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக்
கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு
என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம்
நறுங் காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப்
போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து
காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே
காளியுன்னைக் காணுகிறேன்
காப்பெனக்கு கையிலுண்டு
கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால்
எரிமலை போற் கனன்றிவேன்
தீமைச் செயலெதுவும்
தெரியாது செய்கையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்புக் கையிலிருந்து
கண் திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான
சோதிமிகு காப்பதனை
இருப்பது நாள்வரையில்
இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே
பரவியணிவோர்க்கு
சித்தியெல்லாந் தருவாள்
சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுண்டு
முக்கால் உணர்வுமுண்டு
எச்சகத்திலோர்களெல்லாம்
ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி
துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம்
அருள்வாய் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக்
காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர
முன் வினைகள் நீங்கி வர
ஞானம் ஓங்கிவர
நல்லறிவு துலங்கி வர
தேவிமகா காளியரே
தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த
கௌரியே காப்பருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சகலகலாவல்லி மாலை

வெண்டாமரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டானுறங்க வொழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகலகலா வல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும்பணியிற் பணித்தருள்
வாய் பங்கயாசனத்திற்
கூடும் பசும் பொற்கொடியே
தனதனக் குன்றுமைப்பாற்
காடுஞ்சுமக்குங் கரும்பே
சகலகலா வல்லியே

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தாத்துன்னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகலகலா வல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற்றுறை தோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வுர்க்கும் பெருகப் பணித்தருள்
வாய் வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந்நாவினின்று
காக்குங் கருணைக்கடலே
சகலகலா வல்லியே.

பஞ்சப்பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்
நாவு மகமு வெள்ளைக்
கஞ்சத் தவி சொத் திருந்தாய்
சகலகலா வல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகலகலா வல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங்கொண்டு தொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகலகலா வல்லியே.

சொல்விபற்பனமு மவதானமுங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே
சகலகலா வல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராம் மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குங் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம் புயத்தாளே
சகலகலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரு மென்
பண்கண்ட ளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகலகலா வல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மேனி நின்றும் புரண்டிங்கண்
ஏதேனும் அகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பா பிராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்துனையோ நேரிழையாய் நேரிழைவீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்த
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்து
ஈசனார்க் கன்பார்யா மாரேலோ ரெம்பாவாய்

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
னத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதா
வெத்ததோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணள்நித் திலநகையாய் இன்னும் புலர்ந்தின்றோ?
வண்ணக் ளிளிமொழியர் எல்லோரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துணிவேலோர் எம்பாவாய்!

மாலறியா நான்முகனும்காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்!

மானே நீ ன்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ?
வாேே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலை அளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கு
ஏனோரக்கும் தம்கோனைப் பாடேலோர் எம்பாவய்!

அன்னெ இவையும் சிலவே பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னானை என் அரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெப்வேறாய் இன்னம் துயிலுதியோம்
வன்னெஞ்சப் போதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்!

கோழி சிலம்பச் சிலம்பும் குரகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் வீழுப்பொருள்கள் பானோம் கேட்டிலையோ
வாழி ஈதென்னை உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்!

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்அடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இல்லோமேலோர் எம்பாவாய்!

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
போதை ஒரு பால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்யோரும் மண்ணும் துதித்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதஉலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதாவனூர்? ஏதவன்பேர்? ஆருற்றார்? ஆரயலார்?
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவயா்!

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேர்என்னக்
கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயாவழியடியோம் வாழ்ந்தோம்காண் அரழல்போல்
செய்யாவெண் நீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்!

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நல் தில்லைச் சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கழல்கள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்கள் மேல் வண்டார்ப்பப்
பூர்த்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்!

பைங்குவளைக் கார்மலரால் செய்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும்அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சாத்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கேனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதார் குழை ஆடப் பைம்பூண் கலன் ஆடக்
கோதை குழல் ஆட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல் பாடிச் சிற்றம் பலம்பாடி
தேவப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
அதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
போதித்து நம்மை வளர்த்தெடுத்த பொய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்!

ஒரேருகால் எம்பெருமான் என்றென்றேநம் பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான் பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆம் ஆறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!

முன்னிலைக் கடலை சுருக்கு எழுந்துடையான்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையான் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலப்பின் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையான்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழிவாய் மழையேலோர் எம்பாவாய்!

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாதோர் இன்பம்நாம் பாலதாக்
கொங்குன் கருங்குழலி நம்நம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடிநலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!

அண்ணா மலையான அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணவோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற் போல்
கண்ணார் இரவி கதிர்வவந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்து ஆடேலோர்
எம்பாவாய்.

உங்கையிற் உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனகொன்று உரைப்போம்கேள்
எம்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கலாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எம் கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கேன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்!

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற் சுண்ணம்
## தில்லையில் அருளியது
## ஆனந்த மனோலயம் அறுசீர் அசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மலைதூக்கி
முளைக்குடந் தூபம் நல் தீபம் வைம்மின்
சக்தியும் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

பூவியல் வார்சடை எம்பிரார்க்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே

சுந்தர நீறமணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதியரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தாரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்களு லக்கையெல்லாங்
காம்பணி மின்கள் கரையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழத்தித்
தேசமெல் லாம்புகழ் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாசவி னையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

அறுக்கெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமாரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவெகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

உலக்கை பலஒச்சு வார்பெரியோர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியேமை ஆண்டு கொண்டு
நான்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் அடித்துநாமே

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடகம் மெல்லடி யாரக்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைத்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யென்னும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணருக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிப்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடிந்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே

மின்னிடைச் செந்துவர்வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு தெங்களப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துதுடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே

ஞானக் கரும்பின் றெளியைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுந் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமகங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடிவ லிக்கையேந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிப்
பாலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதர்க்கு சுண்ணம் இடித்துநாமே

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்கு
பந்தமு மாய்இன்பம் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்திசூடி
## கடவுள் வாழ்த்து

**ஆத்தி சூடி அமர்ந்த தேவனை**
**ஏத்தி ஏத்தி தொழுவோம் யாமே**

அறஞ் செய்ய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
எண் எழுத்து இகழேல்
ஏற்பது இகழ்ச்சி
ஐயம் இட்டு உண்
ஒ்பபரவு ஒழுகு
ஓதுவது ஒழியேல்
ஔவியம் பேசேல்
அ்.கஞ் சுருக்கேல்
கண்டு ஒன்று சொல்லேல்
நுப் போல் வளை
சனி நீராடு
ஞயம்பட உரை
இடம் பட வீடு எடேல்
இணக்கம் அறிந்து இணங்கு
தந்தை தாய்ப பேண்
நன்றி மறவேல்
பருவத்தே பயிர் செய்
மண் பறிந்து உண்ணேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பு அலாதன செயயேல்
அரவம் ஆடேல்
இலவம் பஞ்சில் துயில்
வஞ்சகம் பேசேல்
அழகு அலாதன செயேல்
இளமையில் கல்
அரனை மறவேல்
அனந்தல் ஆடேல்
கடிவது மற
காப்பது விரதம்
கிழமைப் பட வாழ்
கீழ்மை அகற்று
குணமது கைவிடேல்
கூடியப் பிரியேல்
கெடுப்பது ஒழி
கேள்வி முயல்
கைவினை கரவேல்
கொள்ளை விரும்பேல்
கோதாட்டு ஒழி
சக்கர நெறி நில்
சான்றோர் இனத்திரு
சித்திரம் பேசேல்
சீர்மை பேசேல்
சீர்மை மறவேல்
களிக்கச் சொல்லேல்
சூது விரும்பேல்
செய்வன திருந்தச் செய்
சேரிடம் அறிந்து சேர்
சை எனத் திரியேல்
சொல் சோர்வு படடேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோம்பித் திரியேல்
தக்கோன் எனத் திரி
தானமது விரும்பு
திருமாலுக்கு அடிமை செய்
தீவினை அகற்று
துன்பத்திற்கு இடம் கொடேல்
தூக்கி வினைசெய்
தெய்வம் இகழேல்
தேசத்தோடு ஒத்து வாழ்
தையல் சொல் கேளேல்
தொன்மை மறவேல்
தோற்பன தொடரேல்
நன்மை கடைப்பிடி
நாடு ஒப்பன செய்
நிலையில் பிரியேல்
நீர் விளையாடேல்
நுண்மை நுகரேல்
நூல் பல கல்
நெல் பயிர் விளை
நேர்பட ஒழுகு
நைவினை நணுகேல்
நொய்ய உரையேல்
நோய்க்கு இடம் கொடேல்
பழிப்பன பகரேல்
பாம்பொடு பழகேல்
பிழைபடச் சொல்லேல்
பீடு பெற நில்
புகழ்ந்தாரைப் போற்றி வாழ்
பூமி திருத்தி உண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியாரைத் துணைக் கொள்
பேதைமை அகற்று
பையலோடு இணங்கேல்
பொருள்தனைப் போற்றி வாழ்
போர்த் தொழில் புரியேல்
மனம் தடுமாறேல்
மாற்றானுக்கு இடம் கொடேல்
மிகைபடச் சொல்லேல்
மீதூண் விரும்பேல்
முனைமுகத்து நில்லேல்
மூர்க்கரோடு இனங்கேல்
மெல்லி நல்லாள் தோள் சேர்
மேன் மக்கள் சொல் கேள்
மை விழியார் மனை அகல்
மொழிவது அற மொழி
மோகத்தை முனி
வல்லமை பேசேல்
வாது முற்கூறேல்
வித்தை விரும்பு
வீடு பெற நில்
உத்தமனாய் இரு
ஊருடன் கூடிவாழ்
வெட்டெனப் பேசேல்
வேண்டி வினை செயேல்
வைகறைத் துயில் எழு
ஒன்னாரைத் தேறேல்
ஓரம் சொல்லேல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கொன்றை வேந்தன்

## காப்பு

கொன்றை வேந்தன் செல்வ னடியினை
என்று மேத்தித் தொழுவோ மியாமே

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
2. ஆலயந் தொழுவது சாலவும் நன்று
3. இல்லற மல்லது நல்லற மன்று
4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு
6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
7. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
8. ஏவா மக்கள் மூவா மருந்து
9. ஐயம் புகினும் செய்வன செய்
10. ஒருவனைப் பற்றி ஓரகத் திரு
11. ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்
12. ஔவியம் பேசுத லாக்கத்திற் கழிவு
13. அ∴கமுங் காசுஞ் சிக்கெனத் தேடு
14. கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை
15. காவல் தானே பாவையர்க் கழகு
16. கிட்டாதாயின் வெட்டென மற
17. கீழோ ராயினும் தாழ வுரை
18. குற்றம் பார்க்கிற் சுற்றம் இல்லை
19. கூரம்பாயினும் வீரியம் பேசேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. கெடுவது செய்யின் விடுவது கருமம்
21. கேட்டி லுறுதி கூட்டு முடைமை
22. கைப்பொரு டன்னின் மெய்ப்பொருள் கல்வி
23. கொற்றவ னறித லுற்றிடத் துதவி
24. கோட் செவிக் குறளை காற்றுட னெருப்பு
25. கௌவை சொல்லி னெவ்வருக்கும் பகை
26. சந்ததிக்கு கழகு வந்தி செய்யாமை
27. சான்றோ ரென்கை ஈன்றோற் கழகு
28. சிவத்தைப் பேணிற் றவத்துக் கழகு
29. சீரைத் தேடி னேரைத் தேடு
30. சுற்றத்திற்கு கழகு சூழவிருத்தல்
31. சூதும் வாதும் வேதனை செய்யும்
32. செய்தவ மறந்தாற் கைதவ மாளும்
33. சேமம் புகினும் யாமத் துறங்கு
34. சையொத் திருந்தா லைய மிட்டுண்
35. சொக்க ரென்பவ ரத்தம் பெறுவர்
36. சோம்பரென்பவர் தேம்பித் திரிவர்
37. தந்தைசொல் மிக்க மந்திரமில்லை
38. தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை
39. திரைகட லோடியுந் திரவியந் தேடு
40. தீராக் கோபம் போராய் முடியும்
41. துடியாய் பெண்டிர் மடியி னெருப்பு
42. தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்
43. தெய்வஞ் சீறிற் கைதவ மாளும்
44. தேடா தழிக்கிற் பாடா முடியும்
45. தையும் மாசியும் வையகத் துறங்கு
46. தொழுதூண் சுவையி னுழுதா ணினிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. தோழ னோடு மேழமை பேசேல்
48. நல்லிணக்க மல்ல அல்லற் படுத்தும்
49. நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை
50. நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை
51. நீரகம் பொருந்திய வூரக் திரு
52. நுண்ணிய கருமமு மெண்ணித் துணி
53. நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு
54. நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை
55. நேரா நோன்பு சீராகாது
56. நைபவ ரெனினும் நொய்ய வுரையேல்
57. நொய்யவ ரென்பவர் வெய்யவ ராவர்
58. நோன்பென் பதுவே கொன்றுதின் னாமை
59. பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்
60. பாலோ டாயினுங் கால மறிந்துண்
61. பிறன்மனை புகாமை அறிமெனத் தகும்
62. பீரம் பேணி பாரம் தாங்கும்
63. புலையுங் கொலையுங் களவுந் தவிர்
64. பூரியோர்க் கில்லை சீரிய வொழுக்கம்
65. பெற்றோர்க் கில்லை சுற்றமும் சினமும்
66. பேதமை யென்பது மாதர்க் கணிகலம்
67. பையச்சென்றால் வையந்தாங்கும்
68. பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்
69. போனக மென்பது தானுழந் துண்டல்
70. மருந்தே யாயினும் விருந்தோடுண்
71. மாரி யல்லது காரிய மில்லை
72. மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை
73. மீகாம னில்லா மரக்கல மோடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
75. மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்தம்
76. மெத்தையிற் படுத்தல் நித்திரைக்கு கழகு
77. மேழிச் செல்வம் கோழை படாது
78. மைவிழி யார்தம் மனையகன் றொழுகு
79. மொழிவது மறுக்கி னழிவது கருமம்
80. மோன மென்பது ஞான வரம்பு
81. வளவ னாயினு மளவறிந் தளித்துண்
82. வானஞ் சுருங்கிற் றானஞ் சுருங்கும்
83. விருந்திலோர்க் கில்லை பொருந்திய வொழுக்கம்
84. வீரன் கேண்மை கூரம்பாகும்
85. உரவோ ரென்கை இரவா திருத்தல்
86. ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு
87. வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தனை
88. வேந்தன் சீறி னாந்துணை யில்லை
89. வையந்தோறும் தெய்வந் தொழு
90. ஒத்த இடத்து நித்திரை கொள்
91. ஓதார்க்கில்லை உணர்வொடு ஒழுக்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண் சோதிடம்

| பிறப்பு எண் | கிரக ஆதிக்கம் | பலன் தரும் இரத்தினங்கள் | எண்களுக்குரிய ஆங்கில எழுத்துக்கள் |
|---|---|---|---|
| 1 | சூரியன் | மாணிக்கம், மஞ்சள், புஷ்பராகம் | A, I, J, Q, Y |
| 2. | சந்திரன் | முத்து | B, K, R |
| 3 | வியாழன் | அமிதிஷ்ட புஸ்பராகம் | C,G, L, S |
| 4. | ராகு | நீலக்கல், கோமேதகம் | D, M, T |
| 5. | புதன் | வைரக்கல் | E, H, N, X |
| 6. | சுக்கிரன் | மரகதம் (பச்சை) | U, V, W |
| 7. | கேது | வைடூரியம், முத்து | O, Z |
| 8. | சனி | நீலக்கல், இந்திரநீலம் | F, P |
| 9. | செவ்வாய் | பவளம் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 x 1 | 1 x 2 | 1 x 3 | 1 x | 1 x 5 | 1 x 6 | 1 x 7 | 1 x 8 |
| 2 x 2 | 2 x 4 | 2 x 6 | 4 | 2 x 10 | 2 x 12 | 2 x 14 | 2 x 16 |
| 3 x 3 | 3 x 6 | 3 x 9 | 2 x | 3 x 15 | 3 x 18 | 3 x 21 | 3 x 24 |
| 4 x 4 | 4 x 8 | 4 x 12 | 8 | 4 x 20 | 4 x 24 | 4 x 28 | 4 x 32 |
| 5 x 5 | 5 x 10 | 5 x 15 | 3 x 12 | 5 x 25 | 5 x 30 | 5 x 35 | 5 x 40 |
| 6 x 6 | 6 x 12 | 6 x 18 | 4 x 16 | 6 x 30 | 6 x 36 | 6 x 42 | 6 x 48 |
| 7 x 7 | 7 x 14 | 7 x 21 | 5 x 20 | 7 x 35 | 7 x 42 | 7 x 49 | 7 x 56 |
| 8 x 8 | 8 x 16 | 8 x 24 | 6 x 24 | 8 x 40 | 8 x 48 | 8 x 56 | 8 x 64 |
| 9 x 9 | 9 x 18 | 9 x 27 | 7 x 28 | 9 x 45 | 9 x 54 | 9 x 63 | 9 x 72 |
| 10 x 10 | 10 x 20 | 10 x 30 | 8 x 32 | 10 x 50 | 10 x 60 | 10 x 70 | 10 x 80 |
| 11 x 11 | 11 x 22 | 11 x 33 | 9 x 36 | 11 x 55 | 11 x 66 | 11 x 77 | 11 x 88 |
| 12 x 12 | 12 x 24 | 12 x 36 | 10 x 40 | 12 x 60 | 12 x 72 | 12 x 84 | 12 x 96 |
| 13 x 13 | 13 x 26 | 13 x 39 | 11 x 44 | 13 x 65 | 13 x 78 | 13 x 91 | 13 x104 |
| 14 x 14 | 14 x 28 | 14 x 42 | 12 x 48 | 14 x 70 | 14 x 84 | 14 x 98 | 14 x112 |
| 15 x 15 | 15 x 30 | 15 x 45 | 13 x 52 | 15 x 75 | 15 x 90 | 15 x105 | 15 x120 |
| 16 x 16 | 16 x 32 | 16 x 48 | 14 x 56 | 16 x 80 | 16 x 96 | 16 x112 | 16 x128 |

| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 x 9 | 1 x 10 | 1 x 11 | 16 x 64 1 x 12 | 1 x 13 | 1 x 14 | 1 x 15 | 1 x 16 |
| 2 x 18 | 2 x 20 | 2 x 22 | 2 x 24 | 2 x 26 | 2 x 28 | 2 x 30 | 2 x 32 |
| 3 x 27 | 3 x 30 | 3 x 33 | 3 x 36 | 3 x 39 | 3 x 42 | 3 x 45 | 3 x 48 |
| 4 x 36 | 4 x 40 | 4 x 44 | 4 x 48 | 4 x 52 | 4 x 56 | 4 x 60 | 4 x 64 |
| 5 x45 | 5 x50 | 5 x55 | 5 x60 | 5 x65 | 5 x70 | 5 x75 | 5 x80 |
| 6 x 54 | 6 x 60 | 6 x 66 | 6 x 72 | 6 x 78 | 6 x 84 | 6 x 90 | 6 x 96 |
| 7 x 63 | 7 x 70 | 7 x 77 | 7 x 84 | 7 x 91 | 7 x98 | 7 x105 | 7 x112 |
| 8 x 72 | 8 x 80 | 8 x 88 | 8 x 96 | 8 x104 | 8 x112 | 8 x120 | 8 x128 |
| 9 x 81 | 9 x 90 | 9 x 99 | 9 x108 | 9 x117 | 9 x126 | 9 x135 | 9 x144 |
| 10 x 90 | 10 x100 | 10 x110 | 10 x120 | 10 x130 | 10 x140 | 10 x150 | 10 x160 |
| 11 x 99 | 11 x110 | 11 x121 | 11 x132 | 11 x143 | 11 x154 | 11 x165 | 11 x176 |
| 12 x108 | 12 x120 | 12 x132 | 12 x144 | 12 x156 | 12 x168 | 12 x180 | 12 x192 |
| 13 x117 | 13 x130 | 13 x143 | 13 x156 | 13 x159 | 13 x182 | 13 x195 | 13 x208 |
| 14 x126 | 14 x140 | 14 x154 | 14 x168 | 14 x182 | 14 x196 | 14 x210 | 14 x224 |
| 15 x135 | 15 x150 | 15 x165 | 15 x180 | 15 x195 | 15 x210 | 15 x225 | 15 x240 |
| 16 x144 | 16 x160 | 16 x176 | 16 x192 | 16 x208 | 16 x224 | 16 x240 | 16 x256 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில் 1932.03.08



ஆண்டவன் அடியில் 2005.09.30

எமது பிறிந்தன் விளையாட்டுக்கழக
உறுப்பினராகிய
சுகந்தனின் அன்புப்பேர்த்தியார்

## திருமதி இராசம்மா கதிரவேலு

30.09.2005 அன்று இறைபதம் எய்தியுள்ளார். அன்னாரின் பிரிவால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்கு எம் அகம்நெகிழும் அஞ்சலிகள்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

01.10.2005


பிறிந்தன் சனசமூகநிலையத்தினர்,
சாவகச்சேரி வடக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
08 – 03 – 1932



மறைவு
30 – 09 – 2005

எமது நண்பர்களாகிய
சுதர்சன், சுகிர்தன், சுகந்தன், சிலோஜன்
அவர்களின் பேர்த்தியார்
அமரர்

## திருமதி இராசம்மா கதிர்வேலு

அவர்கள் 30.09.2005ந் திகதி சிவபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

01.10.2005
நவீன சந்தை,
சாவகச்சேரி.

வசந்தா ரெக்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
1932.03.08



உதிர்வு
2005.09.30

# திருமதி இராசம்மா கதிரவேலு

அவர்கள்

யா/மீசாலை இந்துமன்ற அறநெறிப்பாடசாலையின் பழையமாணவர்களான
செல்வன் சுந்தரலிங்கம் சுதர்சன், திருமதி தனுஷா சுதர்சன்,
செல்வன் சுந்தரலிங்கம் சுலோஜன் ,சுகிர்தன், சுகந்தன்
ஆகியோரின் பேர்த்தியாகிய **திருமதி இராசம்மா** அவர்கள்
30.09.2005 அன்று இறைபத ம் எய்தியமையிட்டு அன்னாரின் பிரிவுத்துயரால்
வாடும் குடும்பத்தினருடன் நாமும் பங்கேற்பதோடு அன்னாரின் ஆத்மா
சாந்திபெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

01.10.2005

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பழையமாணவர்கள்,
மீசாலை மேற்கு.
சிறுவர் பகல் பராமரிப்பு நிலைய
இயக்குனர், ஆசிரியர்கள், மாணவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

நாகமுத்து + வள்ளிப்பிள்ளை

சிதம்பரப்

கதிரவேலு

நாகம்மா
+
அப்பாப்பிள்ளை

கோவிந்தபிள்ளை
(அமரர்)
+
செல்லம்மா
(அமரர்)
↓
கிருபாகரன்

கந்தையா
+
நாகம்மா
↓
குணவதனி
குணபாலன்
குணறாகினி
குணறஜனி
குணதாசன்

லலிதா
+
சுந்தரலிங்கம்
↓
சுதர்சன் + தனுஷா
சுலோஜன் + சிவராஜினி
சுகிர்தன்
சுகந்தன்

சிறிதரன் (அமரர்)

கிருபாகரன் (கனடா)
+
குணவதனி
↓
இந்துஜா
சஞ்ஜீவன்

குணசீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

சிதம்பரப்பிள்ளை + சின்னம்மா

ளை

கந்தையா
+
நாகம்மா
↓
குணவதனி
குணபாலன்
குணறாகினி
குணறஜனி
குணதாசன்

இராசம்மா

ஆச்சிப்பிள்ளை
(இசை ஆசிரியை)
+
குமாரசாமி
(அமரர்)
↓
கல்யாணி
குமரவேள்
கந்தவேள்
கானவேள்
கண்ணகி

சுப்பிரமணியம்
+
சரஸ்வதி
↓
குணாநிதி
ஜெனாநிதி
அருணாநிதி

பாகரன் (கனடா)
+
குணவதனி
↓
இந்துஜா
சஞ்ஜீவன்

குணசீலன் (பிரான்ஸ்)
+
கலாரஞ்சி
↓
நித்திகா
நித்திகன்
கர்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயம் நிறைந்த நன்றிகள்

எமது குடும்பத்தின்
ஒளிவிளக்காய்த் திகழ்ந்த
அமரர் கதிரவேலு இராசம்மா
அவர்கள் நோயுற்று இருந்த போது
உதவி புரிந்த வைத்தியர்களுக்கும் பிரிவுற்ற
போது எமது இல்லம் நாடி வந்த அனைத்து
உள்ளங்களுக்கும் கண்ணீர் அஞ்சலி
செலுத்தியவர்களுக்கும், தோளோடு தோள்
நின்று உதவிய நண்பர்களுக்கும் அந்தியேட்டி,
சபீண்டிகரண கிரிகைகளில் பங்கு கொண்ட
குருமார்களுக்கும், மலரை அச்சிட்டு
வெளியிட்டோருக்கும் எமது அழைப்பை ஏற்று
இங்கு வருகை தந்த அனைத்து
உள்ளங்களுக்கும் எமது நெஞ்சம்
நிறைந்த நன்றிகளை பணிவன்புடன்
சமர்ப்பிக்கின்றோம்.

நன்றி

கணவன். பிள்ளைகள்,மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்."

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**

நியூ அருணா [illegible], சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org